# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 5 | 4 Pages | 06.08.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 5 | 4 பக்கங்கள் | 06.08.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## காஷ்மீரில் பயங்கரவாதிகளுடன் நடந்த துப்பாக்கி சண்டை: 3 ராணுவ வீரர்கள் வீரமரணம்



ஸ்ரீநகர், ஆக. 6

ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகள் நாசவேலைகளில் ஈடுபடாமல் தடுப்பதற்காக பாதுகாப்புப் படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களுடன் காஷ்மீர் போலீசார் இணைந்து பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், ஜம்மு காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக ராணுவத்தினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, அம்மாவட்டத்தின் ஹலன் பகுதியில் நேற்று இரவு ராணுவத்தினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் ராணுவத்தினர்மீதுதுப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இந்த தாக்குதலுக்கு ராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தினர். இதில், பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த 3 ராணுவ வீரர்கள் வீர மரணமடைந்தனர். அப்பகுதியில் தேடுதல் வேட்டை தொடர்ந்து நடந்து வருகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உண்மை எப்போதும் வெல்லும், ஆதரவு அளித்த மக்களுக்கு நன்றி- ராகுல் காந்தி

டெல்லி, ஆக. 6



அவதூறு வழக்கில் விதிக்கப்பட்ட 2 ஆண்டு சிறை தண்டனையை உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்ததை அடுத்து, உண்மை எப்போதும் வெற்றி பெறும் என்றும், மக்கள் அளித்த ஆதரவுக்கு நன்றி என்றும் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ராகுல் காந்தி செய்தியாளர்கள் சந்திப்பின்போது கூறுகையில், "இன்று இல்லை என்றால் நாளையோ அல்லது நாளை மறுநாளோ உண்மை எப்பொழுதும் வெல்லும். மக்களின் ஆதரவுக்கு நான் நன்றி கூறுகிறேன்" என்றார்.

மேலும், ராகுல் காந்தி தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிடுகையில்,"

இந்தியா என்ற எண்ணத்தைப் பாதுகாக்கும் எனது கடமை அப்படியே உள்ளது " என்று குறிப்பிட்டுள்ளார்.

## தண்டவாளத்தைக் கடக்க முயன்ற லாரி மீது ரெயில் மோதி 8 பேர் பலி



பாங்காக், ஆக. 6

தாய்லாந்து நாட்டின் சஷொன்சொ மாகாணம் முவாங் மாவட்டத்தில் நேற்று அதிகாலை 3 மணியளவில் லாரி ஒன்று சென்று கொண்டிருந்தது. அந்த லாரியில் தொழிலாளர்கள் பலர் பயணித்தனர். அந்த லாரி ரெயில்வே தண்டவாளத்தைக் கடக்க முற்பட்டபோது, வேகமாக வந்த சரக்கு ரெயில் லாரிமீது மோதியது. இந்தக் கோர விபத்தில் 3 பெண்கள், 5 ஆண்கள் உள்பட 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 4 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதில் ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார். விபத்து குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று உயிரிழந்தோர் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ரஷிய எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னிக்கு மேலும் 19 ஆண்டு சிறை தண்டனை



மாஸ்கோ, ஆக. 6

ரஷியாவில் பிரதான எதிர்க்கட்சி தலைவராக இருப்பவர் அலெக்சி நவால்னி (49). இவர் அதிபர் விளாடிமிர் புதின் ஆட்சியை கடுமையாக விமர்சித்து வருகிறார். கடந்த 2020ம் ஆண்டு இவருக்கு விஷம் கொடுக்கப்பட்டதாக உடல்நலம் பாதிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக விமானம் மூலம் ஜெர்மனி கொண்டு செல்லப்பட்டார். அவருக்கு கொடிய விஷம் உடலில் கலந்திருப்பதை ஜெர்மன் அரசும் வெளியிட்டது. இதற்கிடையே, ரஷியாவின் எதிர்க்கட்சித் தலைவரான அலெக்சி நவால்னி ஏற்கனவே மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டார். நவால்னி தற்போது மாஸ்கோவிவன் கிழக்கே உள்ள சிறையில் இரண்டரை ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார். நவால்னியை முடிந்தவரை சிறைக்குள் வைத்திருப்பதற்காகவே புதிய விசாரணை நடத்தப்படுவதாக அவரது வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நவால்னி மீது மோசடி மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றம்சாட்ட ப்பட்டு மேலும் 9 ஆண்டுகள் சிறை தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அலெக்சி நவால்னி மீது பதியப்பட்ட மற்றொரு வழக்கில், அவருக்கு 19 ஆண்டு சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

# காவிரியில் இருந்து உரிய நீரை திறந்துவிட கர்நாடகாவுக்கு உத்தரவிட வேண்டும்: பிரதமருக்கு முதலமைச்சர் கடிதம்

சென்னை, ஆக. 6

குறுவை நெற்பயிரைக் காப்பாற்ற காவிரியில் இருந்து உரிய நீரை திறந்துவிட கர்நாடகாவுக்கு உத்தரவிட வேண்டும் என்று பிரதமருக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டு இருப்பதாவது: குறைவான மழை தமிழ்நாட்டில், காவிரி டெல்டா பகுதிகளில், குறுவை சாகுபடிக்காக காத்திருக்கும் நெற்பயிரைக் காப்பாற்றுவதில் காவிரி டெல்டா விவசாயிகள் இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளனர். எனவே காவிரியிலிருந்து உரிய நீரை திறந்துவிட கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும்.

இந்தியாவின் பிற பகுதிகளைப் போல் அல்லாமல், தமிழ்நாடு, குறிப்பாக காவிரி டெல்டா பகுதிகள், தென்மேற்கு பருவமழையின் போது மிகக் குறைவான மழைப் பொழிவைப் பெறுவதால், குறுவை சாகுபடியும், சம்பா நெல் விதைப்பும், மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரை, அதுவும் கர்நாடகாவிலிருந்து வரும் நீரை மட்டுமே சார்ந்துள்ளன.

பற்றாக்குறை மாதாந்திர அட்டவணைப்படி, பிலிகுண்டுலுவில், தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நீரின் பங்கை சுப்ரீம் கோர்ட்டு நிர்ணயித்துள்ளது. துரதிர்ஷ்டவசமாக, இந்த உத்தரவை கர்நாடகம் முழுமையாக மதிக்கவில்லை என்பதோடு, காவிரிநீர் மேலாண்மை ஆணையத்தின் வழிகாட்டுதல்களையும் கடைபிடிக்கவில்லை.




இந்த 2023, 2024ம் ஆண்டில், கடந்த ஜூன் 1ந் தேதி முதல் ஜூலை 31ந் தேதி வரை கர்நாடகாவிலிருந்து பிலிகுண்டுலுவிற்கு 40.4 டி.எம்.சி. தண்ணீர் வந்து சேர வேண்டிய நிலையில், 11.6 டி.எம்.சி தண்ணீர் மட்டுமே வந்துள்ளது.

கர்நாடகாவில், 4 முக்கிய நீர்த்தேக்கங்களின் முழு கொள்ளளவான 114.6 டி.எம்.சி. தண்ணீரில் 91 டி.எம்.சி அளவிற்கு மொத்த நீர் இருப்பு தற்போது உள்ள போதிலும், கர்நாடக அரசு 28.8 டி.எம்.சி.க்கு பற்றாக்குறையாக தமிழ்நாட்டிற்கு தண்ணீர் திறந்துவிட்டுள்ளது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. உயிர்நாடி காவிரி டெல்டாவின் உயிர்நாடியாக விளங்கும் மேட்டூர் அணையில் ஆகஸ்டு 2ந் தேதி நிலவரப்படி, 26.6 டி.எம்.சி. அளவிற்கு மட்டுமே தண்ணீர் உள்ளதாகவும், இது குடிநீர் மற்றும் இதர அத்தியாவசிய தேவைகளுக்கு 15 நாட்களுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும். ஆனால் குறுவை நெற்பயிர் முதிர்ச்சியடைந்து, அதிக மகசூல் பெற, இன்னும், 45 நாட்கள் தண்ணீர் தேவைப்படுகிறது. இது போன்ற ஆபத்தான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, மத்திய ஜல்சக்தித் துறை மந்திரியிடம் கடந்த ஜூலை 5ந் தேதி மற்றும் 19ந் தேதிகளில் இப்பிரச்சினையை எடுத்துச் சென்று, சுப்ரீம் கோர்ட்டு நிர்ணயித்த விநியோக அட்டவணையைக் கடைப்பிடிக்க கர்நாடக அரசுக்கு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும். இதை முறையாக கண்காணிக்க காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை அறிவுறுத்த வலியுறுத்துகிறேன். உடனடியாக தலையிடுங்கள் ஆனாலும், கர்நாடக அரசு இவற்றை கருத்தில் கொள்ளாமல், முழுமையாக நிரம்பிய கபினி அணையில் இருந்து மட்டுமே தண்ணீரைத் திறந்துவிட்டது. கர்நாடகாவின் முக்கிய நீர்த்தேக்கங்கள் 80 சதவீத அளவிற்கு நிரம்பியுள்ள சூழ்நிலையிலும், அவற்றிற்கு தொடர்ந்து நல்ல நீர்வரத்து உள்ள சூழ்நிலையிலும், அந்த நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீர் எதுவும் திறக்கப்படவில்லை. தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா, மாநிலத்தின் நெல் தேவையைப் பெருமளவு பூர்த்தி செய்கிறது. ஏற்கனவே அரிசி தட்டுப்பாட்டால், பாசுமதி அல்லாத அரிசி ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ள தற்போதைய சூழலில், காவிரி டெல்டாவில் தற்போது உள்ள குறுவை நெல் பயிரையும், தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் நீங்கள் உடனடியாக தலையிட்டு காப்பாற்ற வேண்டும். அறிவுரை சுப்ரீம் கோர்ட்டு நிர்ணயித்துள்ளபடி,

தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய தண்ணீரை உடனடியாக திறந்து விடவும், ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் ஏற்பட்ட பற்றாக்குறையைத் தீர்க்கவும் கர்நாடக அரசுக்கு நீங்கள் உரிய அறிவுரைகளை வழங்கி, அதை உறுதி செய்வதற்கு தேவையான அறிவுரைகளை மத்திய ஜல்சக்தி அமைச்சகத்திற்கும் வழங்க வேண்டும் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கடலூரில் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்துக்கு தலா ரூ.2 லட்சம் உதவி: முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஆக. 6

சிறுவர்கள் கொள்ளிடம் ஆற்றில் குளித்துக்கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர். சிறுவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், வெள்ளூர் கிராமத்தைச் சேர்ந்த சபரிவாசன், (வயது 10) மற்றும் யோகேஸ்வரன் (வயது 8) ஆகிய இரண்டு சிறுவர்களும் கொள்ளிடம் ஆற்றில் குளித்துக்கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன். உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களின் குடும்பத்தினருக்கு தலா 2 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



## குழந்தைகளுக்கு 6 மாதங்கள் வரை கண்டிப்பாக தாய்ப்பால் கொடுக்க வேண்டும்

திருப்பூர், ஆக. 6

திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் உலக தாய்ப்பால் வார விழா விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நாட்டு நலப்பணித் திட்டம் அலகு 2 சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் கிருஷ்ணன் தலைமை வகித்தார். நாட்டு நலப்பணித் திட்டம் அலகு2 இன் ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார் முன்னிலை வகித்தார். பேராசிரியர் விநாயகமூர்த்தி வரவேற்றார். குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் சௌமியா, அரசு மருத்துவர் கலைச்செல்வன் ஆகியோர் பேசியதாவது: குழந்தைகளின் முக்கிய உணவுப்பொருள் தாய்ப்பால். இது, குழந்தைகளுக்கு சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியாகவும், புத்திக்கூர்மையை வளர்ப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. எனவே, குழந்தைகளுக்கு 6 மாதங்கள் வரை கண்டிப்பாக தாய்ப்பால் கொடுக்க வேண்டும். குழந்தைகளுக்கு வயிறு, குடல் நோய்கள் வராமல் தடுக்கிறது. குழந்தைகளின் ஜீரண உறுப்புகளில் நோய் எதிர்ப்புத் தன்மையை பெருக்குகிறது. பிறந்த குழந்தைகளுக்கு ஆஸ்துமா, காது சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படுவதையும் தடுக்கிறது. தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் பெண்களுக்கு மார்பகம், கர்ப்பப்பை புற்றுநோய் ஏற்படுவதை தடுக்கிறது என்றனர். நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை டெல்லி பயணம்?

சென்னை, ஆக. 6



தமிழகபா.ஜ.க.தலைவர் அண்ணாமலை 'என் மண், என் மக்கள்' என்ற தலைப்பில் நடைபயணம் மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில் அண்ணாமலை திடீர் பயணமாக இன்று டெல்லி செல்கிறார் என தகவல் வெளியாகியுள்ளது. இன்று ஒய்வுநாளாகதிட்டமிடப்பட்ட நிலையில், பா.ஜ.க. தேசிய தலைவர் ஜே.பி. நட்டா அழைப்பின் பேரில் அண்ணாமலை அவசர பயணமாக இன்று டெல்லி செல்கிறார்.



மண்டலம் 3 வார்டுஎண் 46 ராக்கியாபாளையம் ஜெய் நகரில் GULLY sports Arena உள்விளையாட்டரங்கத்தை திறந்து வைத்து மேயர் வடக்கு மாநகரக் கழகச் செயலாளர் .ந. தினேஷ்குமார்வாழ்த்துரை வழங்கினார். 3மண்டலத் தலைவர் கோவிந்தசாமி, வட்டக் கழகசெயலாளர் பத்திரன், பகுதி அவைத் தலைவர் சுப்பிரமணியம், ஜேம்ஸ் அமுதம் பர்னிச்சர் ரகுமான் வள்ளியம்மைநகர் பள்ளிவாசல் நிர்வாகிகள் தலைவர் முனாப் செயலாளர் நஜ்முதீன் இமாம் அப்துல் ரஹீம் நாராயணசாமி நகர் குடியிருப்போர் நல சங்க நிர்வாகிகள் சங்கரலிங்கம் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

# 4 நாள் சுற்றுப்பயணமாக ஜனாதிபதி திரவுபதி முர்மு சென்னை வருகை



சென்னை, ஆக. 6

ஜனாதிபதி திரவுபதி முர்மு இன்று முதல் 8ம் தேதி வரை தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள இருக்கிறார். முதுமலை புலிகள் காப்பகத்திற்கு வருகை தரும் அவர், தமிழ் நாட்டில் உள்ள யானைகள் பராமரிப்போருடன் கலந்துரையாடுகிறார். இதன் பின், சென்னை பல்கலைக் கழகத்தின் 165வது பட்டமளிப்பு விழாவில் ஆகஸ்ட் 6ம் தேதி ஜனாதிபதி உரையாற்றுகிறார்.

அன்றைய தினம், சென்னை கவர்னர் மாளிகையில், தமிழ்நாட்டின் பழங்குடியின பிரதிநிதிகளைச் சந்திக்கிறார். மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் உருவப்படத்தைத் திறந்து வைப்பதுடன், கவர்னர் மாளிகையில் உள்ள தர்பார் மண்டபத்துக்கு பாரதியார் மண்டபம் என பெயர் சூட்டும் விழாவிலும் அவர் பங்கேற்கிறார். அதன்பின், புதுச்சேரியில் உள்ள ஜவகர்லால் முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (ஜிப்மர்) லீனியர் ஆக்சிலரேட்டர் உபகரணத்தை ஆகஸ்ட் 7ம் தேதியன்று தொடங்கி வைக்கிறார். தேசிய ஆயுஷ் திட்டத்தின் கீழ் வில்லியனூரில் அமைக்கப்பட்டுள்ள 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை திறந்துவைக்கும் அவர், புதுச்சேரி அரசு சார்பில் நடைபெறும் வரவேற்பு நிகழ்ச்சியிலும் கலந்து கொள்கிறார்.

ஆகஸ்ட் 8, 2023 அன்று, ஆரோவில்லில் நகர கண்காட்சியான மணிமந்திரைப் பார்வையிடும் ஜனாதிபதி திரவுபதி முர்மு, அங்கு மாநாடு ஒன்றையும் தொடங்கி வைக்கிறார். ஜனாதிபதி வருகையை முன்னிட்டு அவருக்கு 5 அடுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. 1000 போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகிறார்கள்.

# திருவொற்றியூரில் முன்னாள் எம்.எல்.ஏ. குப்பன் மகன் உருவ படம்: எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார்



திருவொற்றியூர், ஆக. 6

திருவொற்றியூர்தொகுதி முன்னாள் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வாக இருந்தவர் கே.குப்பன். இவரது 2வது மகன் கே.மோகன் கடந்த மாதம் 28ந்தேதி காலமானார். அவரது உருவ படத்திறப்பு நிகழ்ச்சி இன்று திருவொற்றியூர் ஜீவன்லால் நகரில் உள்ள குப்பன் இல்லத்தில் நடைபெற்றது. மோகனின் படத்தை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். நிகழ்ச்சியில் அவைத்தலைவர் தமிழ் மகன் உசேன், முன்னாள் அமைச்சர்கள் தளவாய் சுந்தரம், மாதவரம் வி.மூர்த்தி பா.பெஞ்சமின், ரமணா, ஆவடி அப்துல் ரகீம் மாவட்ட செயலாளர்கள் ஆர்.எஸ். ராஜேஷ், அலெக்சாண்டர், முன்னாள் எம்.எல்.ஏ. பூந்தமல்லி மணிமாறன் உட்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக குப்பன் குடும்பத்தினருக்கு எடப்பாடி பழனிசாமி ஆறுதல் கூறினார். அப்போது கவுன்சிலர் கே.கார்த்திக் உட்பட அவரது குடும்பத்தினர் உடன் இருந்தனர்.

# கன்னியாகுமரி கடற்கரையில் காற்றாடி திருவிழா

கன்னியாகுமரி, ஆக. 6

குமரி மாவட்ட நிர்வாகமும் மாவட்ட சுற்றுலா துறையும் இணைந்து சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் கன்னியாகுமரியில் முதல் முறையாக காற்றாடி திருவிழாவை நடத்தின. சூரிய அஸ்தமன காட்சி முனைய பகுதியில் நடந்த இந்த நிகழ்ச்சியை அமைச்சர் மனோ தங்கராஜ் தொடங்கி வைத்தார். இந்த காற்றாடி திருவிழாவில் தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர் உள்பட பல்வேறு வெளிநாடுகள் மற்றும் இந்தியாவின் வட மாநிலங்களை சேர்ந்த காற்றாடி இயக்குவர்கள் பல வண்ண காற்றாடிகளை பறக்க விட்டனர். முதலில் வாழ்க தமிழ் என்ற வாசகத்துடனான காற்றாடி பறக்க விடப்பட்டது. அதன்பிறகு நமது நாட்டின் தேசியக் கொடியின் மூவர்ண நிறத்திலான பலூன் பறக்கவிடப்பட்டது. தொடர்ந்து 50க்கும் மேற்பட்ட காற்றாடிகள் பறக்க விடப்பட்டு வானத்தில் வர்ணஜாலங்கள் காட்டின. புலி உருவங்களுடன் கூடிய காற்றாடி, கார்ட்டூன்தொடர்களில் வரும் ஸ்பான்ஜ் பாப் உருவ காற்றாடி, சோட்டா பீம், டோலுபோலு, சுட்கி, பாலகணேசா, யானை, அசோக சக்கர வடிவிலான காற்றாடி என பலவித காற்றாடிகள் விண்ணில் பறக்க விடப்பட்டன. இதனை சுற்றுலா பயணிகளும் மாணவ மாணவிகளும் கண்டு ரசித்தனர். தாய்லாந்து நாட்டை சேர்ந்த பெக்கி என்பவர் தனது குழுவினருடன் தங்கள் நாட்டின் பிரபலமான கார்ட்டூன் பொம்மை உருவ காற்றாடியை பறக்க விட்டனர். அவர் கூறுகையில், கன்னியாகுமரி கடற்கரை எனக்கு மிகவும் பிடித்துள்ளது. இந்தியாவில் 2வது முறையாக காற்றாடி திருவிழாவில் பங்கேற்கிறோம் என்றார்.

குஜராத் மாநிலத்தை சேர்ந்த மேகுல் படக் கூறுகையில், கன்னியாகுமரி மிகவும் அருமையான சுற்றுலா தலம். இந்த காற்றாடி திருவிழா, சுற்றுலா வளர்ச்சிக்கு மிகவும உறுதுணையாக இருக்கும். நான் 2007ம் ஆண்டு முதல் காற்றாடிகளை பறக்க விட்டு வருகிறேன்.

இந்தோனேசியாவில் உலக அளவிலான காற்றாடி கண்காட்சியில் நான் காற்றாடி பறக்க விட்டபோது, நமது பிரதமரும், இந்தோனேசியா பிரதமரும் பார்வையிட்டனர் என்றார்.



# ஸ்ரீரங்கம் கோயில் கிழக்கு கோபுரம் முதல் நிலையில் உள்ள சுவர் இடிந்து விழுந்தது

ஸ்ரீரங்கம், ஆக. 6

ஸ்ரீரங்கம் கோயில் கிழக்கு வாசலில் நுழைவு கோபுரத்தின் முதல் நிலை மற்றும் 2வது நிலை சுவர்கள் சில தினங்களாக விரிசல் ஏற்பட்டு இருந்தன. விரிசல் அதிகமான நிலையில் முதல் நிலை கோபுரத்தின் சுவர் மளமளவென இடிந்து விழுந்தது. நள்ளிரவு 1.50 மணியளவில் இந்த சம்பவம் நடைபெற்றதால் பெரிய அளவில் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது.



# சேவல் சூதாட்டம்: 30 பேர் கைது

வெள்ளகோவில், ஆக. 6

வெள்ளகோவிலில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ரமாதேவி மற்றும் போலீசார் வெள்ளகோவில் கிராம பகுதிகளில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். அப்போது இலுப்பைகிணறு என்ற இடத்தில் கும்பலாக ஆட்கள் நின்று கூச்சலிட்டு கொண்டிருந்தனர். அங்கு சென்று பார்த்தபோது சண்டை சேவல்களை வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்டு கொண்டிருப்பது தெரியவந்தது. இதையடுத்து சேவல் சண்டை சூதாட்டத்துக்கு ஏற்பாடு செய்த வெள்ளகோவில் பகுதியைச் சேர்ந்த பிரபாகரன் (வயது33) உள்ளிட்ட 30 பேரை கைது செய்து அவர்களிடமிருந்த ரூ. 12,200 பணம் மற்றும் 10 சேவல்களை பறிமுதல் செய்தனர். சூதாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.





# அவினாசியில் தமிழ் மன்றம் தொடக்க விழா

அவினாசி, ஆக. 6

அவினாசியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ் மன்ற தொடக்க விழா நடந்தது. கல்லூரி முதல்வர் ஜோ.நளதம் தலைமையில் நடந்த நிகழ்ச்சியில், கல்லூரி தமிழ்த் துறை தலைவர் மணிவண்ணன் வரவேற்றார். ச.கண்ணப்பன் வாழ்த்துரையாற்றினார். திரைப்பட இயக்குனர் ராசி அழகப்பன் தமிழ்மன்றத்தை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினர். மாணவர்கள் 135 குறள் ஒப்புவித்தல், நவீன நாடகம், பெருஞ்சலங்கை ஆட்டம். சலங்கை ஆட்டம், ஒயிலாட்டம் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தி காட்டினர். இதில் கல்லூரி பேராசியர்கள், மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# விதவைப் பெண் கோயிலுக்குள் செல்வதை தடுப்பதா? ஐகோர்ட் நீதிபதி வேதனை



சென்னை, ஆக. 6

ஈரோடு மாவட்டம், நம்பியூர் தாலுகா, கெட்டிசேவியூர் கிராமத்தில் உள்ள பெரிய கருப்பராயன் கோவிலில் பூசாரியாக இருந்த பொங்கியப்பன் கடந்த 2017ம் ஆண்டு மரணம் அடைந்தார். இந்தக் கோவிலில் வரும் 9 மற்றும் 10ம் தேதிகளில் ஆடித் திருவிழா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில் பூசாரி பொங்கியப்பனின் மனைவி தங்கமணி மற்றும் மகனை கோவிலுக்குள் நுழைய அந்த ஊரைச் சேர்ந்த அய்யாவு மற்றும் முரளி ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். விதவை என்பதால் கோவிலுக்குள் நுழையக் கூடாது என மிரட்டுவதால், திருவிழாவில் கலந்துகொண்டு, கோவிலுக்குள் சென்று, வேண்டுதலை நிறைவேற்றுவதற்கு பாதுகாப்பு வழங்க காவல்துறைக்கு உத்தரவிட வேண்டும் என தங்கமணி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ், விதவைப்பெண் கோவிலுக்குள் நுழைந்தால் புனிதம் கெட்டு விடும் என்ற மூட நம்பிக்கைகள் தமிழகத்தில் இன்னும் நிலவுவது துரதிருஷ்டவசமானது. பல சீர்திருத்தவாதிகள் இந்த அர்த்தமற்ற நம்பிக்கைகளை உடைக்க முயன்றாலும், சில கிராமங்களில் அது தொடர்ந்து நடைமுறையில் உள்ளது என வேதனை தெரிவித்தார். மேலும், ஆண்கள் தங்கள் வசதிக்கேற்ப வகுத்த இந்தக் கோட்பாடுகள் மற்றும் விதிகளால், கணவனை இழந்ததால் பெண்ணை இழிவுபடுத்துகின்றன எனவும் உத்தரவில் குறிப்பிட்டுள்ளார். சட்டத்தின் ஆட்சி நடைபெறும் நாகரீக சமுதாயத்தில் இவையெல்லாம் தொடர அனுமதிக்க முடியாது என தெரிவித்த நீதிபதி, மனுதாரர் தங்கமணியும், அவரது மகனும் திருவிழா மற்றும் கடவுள் வழிபாட்டில் கலந்து கொள்வதைத் தடுக்க எவருக்கும், எந்த உரிமையும் இல்லை என குறிப்பிட்டுள்ளார். மனுதாரரை கோவிலுக்குள் நுழையவிடாமல் யாரேனும் தடுக்க முயற்சித்தால், அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். தங்கமணி கோவிலுக்குள் செல்வதை தடுக்கும் அய்யாவு மற்றும் முரளி ஆகியோரை சிறுவலூர் காவல் நிலைய ஆய்வாளர் அழைத்து கோவிலுக்கு வரும் தாய் மகனையும் தடுக்கக்கூடாது என அறிவுறுத்தும்படி உத்தரவிட்டார். நீதிமன்ற உத்தரவுபடி வழங்கப்படும் அந்த அறிவுறுத்தலையும் மீறி அவர்கள் இருவரும் செயல்பட்டால் சட்டத்திற்குட்பட்டு இருவர் மீதும் நடவடிக்கை எடுக்கலாம் என காவல்துறைக்கு அனுமதி அளித்தும் உத்தரவிட்டுள்ளார். மேலும் திருவிழா நடக்கக்கூடிய இரு நாட்களிலும் தாயும் மகனும் கலந்து கொள்வதை காவல்துறை உறுதிப்படுத்த வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.



# விற்பனைக் கூடத்தில் ரூ. 1.50 கோடிக்கு பருத்தி விற்பனை

மூலனூர், ஆக.6

வெள்ளக்கோவிலை அடுத்த மூலனூர் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இதில், சுற்றுவட்டாரகிராமங்களைச்சேர்ந்தவிவசாயிகள் பருத்தியை விற்பனைக்கு கொண்டுவருகின்றனர். பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்று பருத்தியை கொள்முதல் செய்கின்றனர். இந்நிலையில் இந்தவாரம் நடைபெற்ற ஏலத்தில் 2,122 குவிண்டால் பருத்தி விற்னைக்கு கொண்டுவரப்பட்டது. குவிண்டால் ரூ.6,450 முதல் ரூ.7,828 வரை விற்பனையானது. ஏலத்தில் மொத்தமாக ரூ.1.50 கோடி மதிப்பிலான பருத்தி விற்பனையானது. இத்தகவலை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சிவகுமார் தெரிவித்துள்ளார்.

# அடையாளம் தெரியாத வாகனம் மோதி ஒருவர் சாவு

பல்லடம், ஆக. 6

பல்லடம் அருகே திருப்பூர் தாராபுரம் சாலையில் குப்பிச்சிபாளையத்தை அடுத்த தனியார் கல்லூரி அருகே சம்பவத்தன்று ஒருவர் பலத்த காயங்களுடன் கிடப்பதாக அவிநாசி பாளையம் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் அங்கு சென்று பார்த்தபோது 30 வயது மதிக்கத்தக்க ஒருவர் அடிபட்டு கிடந்தார். அவர் மீது எந்த வாகனம் மோதியது என்பது தெரியவில்லை. உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தனர். அங்கு தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

# மினி ஒலிம்பியாட் அமைக்க அரசு நிலம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு



திருவள்ளூர், ஆக. 6

பூந்தமல்லி அடுத்த வெள்ளவேடு காவல் நிலையத்துக்குட்பட்ட குத்தம்பாக்கம் ஊராட்சியில் அரசு அனாதினம் நிலம் 100 ஏக்கர் உள்ளது.

இந்த அரசு நிலத்தில் மினி ஒலிம்பியாட் விளையாட்டு மைதானம் அமைக்க ஏதுவாக இருக்குமா என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மினி ஒலிம்பியாட் விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்து அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின் போது திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அல்பி ஜான் வர்கீஸ், பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# மதுரை அ.தி.மு.க. மாநாட்டுக்கு பந்தல் அமைக்கும் பணி தீவிரம்



மதுரை, ஆக. 6

மதுரையில் அ.தி.மு.க. எழுச்சி மாநாட்டுக்கான பந்தல் அமைக்கும் பணி இரவு பகலாக முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. அ.தி.மு.க. பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டதையடுத்து அ.தி.மு.க.வின் எழுச்சி மாநாடு மதுரையில் வருகிற 20ந்தேதி நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் தமிழகம் முழுவதும் இருந்து பல லட்சம் தொண்டர்களை பங்கேற்க செய்ய அ.தி.மு.க. நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள் தீவிர ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள். மாநாட்டில் அதிக அளவில் தொண்டர்களை திரட்டும் வகையில் தீவிரமாக பணியாற்றும்படி மாவட்ட செயலாளர்களுக்கும், முன்னாள் அமைச்சர்களுக்கும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை வழங்கி உள்ளார். ஒவ்வொரு மாவட்டத்திலும் அ.தி.மு.க. ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும் குறைந்தது 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர்களை பங்கேற்க செய்யும் வகையில் ஏற்பாடுகளை செய்ய மாவட்ட செயலாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு லட்சம் தொண்டர்களை மதுரை மாநாட்டிற்கு அழைத்து வர ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் மதுரை மாநாட்டில் பங்கேற்கும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இதற்காக மதுரை ரிங்ரோடு வலையன்குளம் சந்திப்பில் சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் மாநாட்டு மைதானம் தயார் செய்யப்பட்டுள்ளது. இங்கு பிரம்மாண்ட மேடை மற்றும் பந்தல் அமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இதனை முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் ராஜூ, ஆர்.பி.உதயகுமார் மற்றும் ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ. ஆகியோர் கண்காணித்து வருகிறார்கள். மேலும் தலைமை கழக நிர்வாகிகளும் பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கி வருகிறார்கள். இந்த நிலையில் மாநாட்டு ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. மாநாட்டில் பங்கேற்பவர்களுக்கு தேவையான குடிநீர் மற்றும் உணவு வழங்குவது குறித்து சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. உணவு வழங்குவதற்கான 10 ஆயிரம் நபர்களுக்கு ஒரு கவுண்டர் வீதம் சிறப்பு கவுண்டர்கள் அமைக்கப்பட்டு உணவு பரிமாற ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. மேலும் ஆங்காங்கே குடிநீர் தொட்டிகள் அமைக்கவும், நடமாடும் கழிப்பிட வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளையும் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மாநாட்டுக்கு இன்னும் 15 நாட்களே உள்ள நிலையில் பணிகள் முழுவீச்சு நடைபெற்று வருகின்றன. இரவு, பகலாக சுமார் 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பந்தல் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அ.தி.மு.க. பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி பதவி ஏற்ற பிறகு முதல் முதலாக நடைபெறும் மாநாடு என்பதால் இந்த மாநாட்டை சிறப்பாகவும், எழுச்சியாகவும் நடத்தி காட்ட அ.தி.மு.க. தலைமை கழக நிர்வாகிகள் பம்பரமாக சுழன்று பணியாற்றி வருகிறார்கள். மாநாட்டில் 20ந்தேதி காலை எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க. கொடி ஏற்றி வைக்கிறார். மாலை 5 மணி அளவில் மாநாட்டில் சிறப்புரையாற்றுகிறார். மாநாட்டில் கவியரங்கம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. மாநாட்டில் முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்படுகிறது. மாநாட்டுக்கு தொண்டர்கள் வரும் வாகனங்களை நிறுத்துவதற்கு நான்கு பகுதிகளில் வாகன நிறுத்துமிடம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தொண்டர்களுக்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவும் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டிடம் மனு அளிக்கப்பட உள்ளது. எனவே மதுரையில் நடைபெறும் அ.தி.மு.க. எழுச்சி மாநாடு தமிழக அரசியலில் அ.தி.மு.க.வின் செல்வாக்கை மேலும் உயர்த்தும் வகையில் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருவதாகவும், இந்த மாநாடு வருகிற பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. வெற்றிக்கு கட்டியம் கூறும் வகையில் அமையும் என்றும் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ தெரிவித்துள்ளார்.

# தஞ்சை கலெக்டர் அலுவலகம் முன்பு கரும்புகளை ஏந்தி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர், ஆக. 6

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகே திருமண்டகுடியில் திருஆருரான் சர்க்கரை ஆலை செயல்பட்டு வந்தது. இந்நிலையில் இந்த சர்க்கரை ஆலையை நிர்வாகம் கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை சுமார் ரூ.115 கோடி வழங்கவில்லை. மேலும் 2018 ஆம் ஆண்டு இந்த ஆலை நிர்வாகம் ஆலையை நிரந்தரமாக மூடியது. மேலும் ஆலை நிர்வாகம், விவசாயிகளின் பெயரில் மோசடியாக வங்கிகளில் சுமார் பல கோடி ரூபாய் கடன் பெற்றுள்ளது. எனவே ஆலை நிர்வாகத்தை கண்டித்தும், விவசாயிகளின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண கோரியும் கடந்த 8 மாதங்களாக அந்த ஆலை முன்பு தொடர் போராட்டத்தில் கரும்பு விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு உடனடியாக தீர்வு காண வலியுறுத்தி இன்று தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழக கரும்பு விவசாயிகள் சங்க மாநில செயலாளர் தங்க காசிநாதன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் செந்தில்குமார் ஆகியோர் தலைமை தாங்கினர். மாவட்ட செயலாளர் என்.வி. கண்ணன் முன்னிலை வகித்தார். இதில் தமிழ்நாடு விவசாய சங்க மாநில பொதுச்செயலாளர் சாமி நடராஜன், கரும்பு விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் ரவீந்திரன் உள்ளிட்ட பலர் சிறப்புரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தில் கரும்பு விவசாயிகளின் பிரச்சனைகளை தீர்க்கக்கோரி கரும்புகளை கைகளில் ஏந்திய படி கோஷங்கள் எழுப்பப்பட்டன. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



# சோலை மரங்களையொட்டி சுற்றுச்சுவர் அமைக்கும் பணி

கோத்தகிரி, ஆக. 6

கோத்தகிரி அருகே சாலையோரம் உள்ள சோலை மரங்களையொட்டி சுற்றுச்சுவர் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதனால் மரங்கள் பட்டு போகும் அபாயம் உள்ளது. எனவே, பணியை தடுத்த நிறுத்த சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

நீலகிரி கோத்தகிரி கோத்தகிரி அருகே சாலையோரம் உள்ள சோலை மரங்களையொட்டி சுற்றுச்சுவர் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதனால் மரங்கள் பட்டு போகும் அபாயம் உள்ளது. எனவே, பணியை தடுத்த நிறுத்த சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

சோலை மரங்கள் கோத்தகிரியில் இருந்து 6 கி.மீ. தொலைவில் கடைகம் பட்டி கிராமம் உள்ளது. இங்கு 200க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இந்த பகுதிக்கு செல்லும் வழியில் பனகம்பை, ஐக்கலோடை, கடைகம்பட்டி வரை பலர் தேயிலை தோட்டங்களை வாங்கி, செடிகளை பிடுங்கி அகற்றி விட்டு, சொகுசு பங்களாக்கள், தனியார் விடுதிகள் கட்டி உள்ளனர். இதற்கிடையே கடைகம் பட்டி கிராமத்திற்கு செல்லும் சாலையோரத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் சோலை மரக்கன்றுகளான சம்பங்கி பூ மரக்கன்றுகள் வரிசையாக நடவு செய்யப்பட்டன.

இவை தற்போது நன்கு வளர்ந்து பச்சைப்பசேல் இலைகளுடனும், கொத்து கொத்தாக பூக்கள் பூத்து குலுங்கி வருகின்றன. அதில் இருந்து வெளியாகும் நறுமணம் அந்த வழியாக செல்பவர்களின் மனதை கவரும் வகையில் இருந்தது. ஆனால், தற்போது அங்கு விடுதிகள், சொகுசு பங்களாக்கள் கட்டியவர்கள் சிலர் தங்களது கட்டிடத்திற்கு சுற்றுச்சுவர் கட்டி வருகின்றனர்.

இதற்காக சாலையோரம் உள்ள சோலை மரங்களின் வேர்கள் பாதிக்கும் வகையில் குழி தோண்டி அஸ்திவாரம் அமைத்து வருகின்றனர். 3 இடங்களில் மரங்களையொட்டி சுற்றுச்சுவர் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதனால் அந்த மரங்கள் பட்டுப் போகும் அபாயம் உள்ளது.

இது குறித்து சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறும்போது, சுற்றுச்சூழலை பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் மரக்கன்றுகள் நடுவதற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்தநிலையில் சோலை மரங்களையொட்டி சுற்றுச்சுவர் அமைப்பதால், மரங்களின் வேர்கள் செல்வது தடைபட்டு மரத்தை பட்டு போக செய்யக்கூடும். ஏற்கனவே நடவு செய்யப்பட்ட மரங்களை பாதுகாக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணியை தடுத்து நிறுத்த வேண்டும் என்றனர்.

# கொலை வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்ட 4 பேருக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்: மதுரை ஐகோர்ட்டு உத்தரவு

மதுரை, ஆக. 6

தூத்துக்குடி மாவட்டம் முடிவைத்தானேந்தல் பகுதியைச்சேர்ந்த பரமசிவம், வரதராஜன் கடலைமுத்து மற்றும் யேசுதாசன் ஆகியோருக்கும் பக்கத்து வீட்டுகாரருக்கும் இடையே கடந்த 2013ல் சிவில் பிரச்சினை இருந்தது. இந்த விவகாரத்தில் தட்டப்பாறை இன்ஸ்பெக்டர் செல்வம், காவல் நிலையத்தில் வைத்து பஞ்சாயத்து பேசியுள்ளார். இதற்கு 4 பேரும் ஒத்துக்கொள்ளவில்லை. இதனால் ஆத்திரமடைந்த இன்ஸ்பெக்டர் அப்போது நடந்த இரட்டை கொலையில் 4 பேரையும் சேர்த்துள்ளார். இதனால் வரதராஜன், கடலைமுத்து மற்றும் யேசுதாசன் ஆகியோர் 92 நாட்களும், பரமசிவம் 53 நாளும் சிறையில் இருந்துள்ளார். இதற்காக இழப்பீடும், இன்ஸ்பெக்டர் மீது உரிய நடவடிக்கையும் கோரி 4 பேரும் ஐகோர்ட்டு மதுரை கிளையில் மனு செய்தனர். இதற்கிடையே சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டர் இறந்ததால், அவர் மீதான நடவடிக்கை கைவிடப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சுவாமிநாதன் தனது உத்தரவில் கூறியதாவது:

மனுதாரர்கள் 4 பேரும் கொலை வழக்கில் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளனர். இதனால் இழப்பீடு பெற தகுதி பெறுகின்றனர். இன்ஸ்பெக்டர் இறந்ததால் எப்படி இழப்பீடு வழங்க வேண்டும் என்பது மட்டும் தான் கேள்வியாக உள்ளது. எனவே, அரசு தான் இழப்பீடு வழங்க வேண்டும். வரதராஜன் கடலை முத்து மற்றும் யேசுதாசன் ஆகியோர் நாளொன்றுக்கு ரூ. 7500 வீதம் தலா ரு. 6.90 லட்சமும். பரமசிவம் ரூ.3 லட்சத்து 97 ஆயிரத்து 500ம் இழப்பீடு பெற தகுதி உள்ளது. இதை உள்துறை செயலர் மற்றும் தூத்துக்குடி கலெக்டர் ஆகியோர் 6 சதவீத வட்டியுடன் 8 வாரத்திற்குள் வழங்க வேண்டும். வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழும் மனுதாரர்கள் இழப்பீடு பெற தகுதி பெறுகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.



# தீவனம் தட்டுப்பாடு: சீனாபுரம் சந்தையில் கறவை மாடுகள் விலை குறைந்தது

தர்மபுரி, ஆக. 6

வனம் தட்டுப்பாடு ஏற்பட்டுஉள்ளதால்சீனாபுரம் சந்தையில் கறவை மாடுகள் விலை குறைந்தது. ஈரோடு பெருந்துறை தீவனம் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளதால் சீனாபுரம் சந்தையில் கறவை மாடுகள் விலை குறைந்தது. கால் நடை சந்தை பெருந்துறை அருகேஉள்ளசீனாபுரத்தில் நேற்று மாட்டுச்சந்தை நடைபெற்றது. தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம், சேலம் மாவட்டம் முத்த நாயக்கன்பட்டி, நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு, கோவை மாவட்டம் அன்னூர், திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை உள்ளிட்ட இடங்களில் இருந்து மாடுகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டு இருந்தன.

விர்ஜின் கலப்பின கறவை மாடுகள் 100ம், இதே இன கிடாரி கன்றுகள் 150ம் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதேபோல் சிந்து மற்றும் ஜெர்சி கறவை மாடுகள் 120ம், இதே இன கிடாரிக் கன்றுகள் 200ம் விற்பனைக்கு வந்திருந்தன

விலை குறைந்தது கால் நடை தீவனங்களுக்கு தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், கறவை மாட்டின் விலை குறைந்தது. கடந்த வாரம் ரூ.65 ஆயிரத்துக்குவிற்றகறவை மாடு நேற்று நடந்த சந்தையில் ரூ.55 ஆயிரத்துக்கு விற்றது. இதேபோல் கடந்த வாரம் ரூ.35 ஆயிரத்துக்கு விலை போன ஜெர்சி மாடு, நேற்று ரூ.27 ஆயிரத்துக்குதான் விற்றது.ரூ.45 ஆயிரத்துக்கு விற்பனையான விர்ஜின் கலப்பின கிடாரிக்கன்று நேற்று ரூ.35 ஆயிரத்துக்கு மேல் யாரும் விலை கேட்கவில்லை. நேற்று ரூ.1 கோடிக்கு மாடுகள், கன்றுகள் விற்பனையாகி இருக்கலாம் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். திருப்பூர், கோவை, ஈரோடு மாவட்ட வியாபாரிகளும், விவசாயிகளும் மாடுகளை வாங்கி வாகனங்களில் ஏற்றிச்சென்றனர்.



# டெல்டா பகுதியை சீரழிக்கும் மேகதாது அணை கட்ட அனுமதிக்கக்கூடாது ஜி.கே.வாசன் வலியுறுத்தல்

சென்னை, ஆக. 6

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: மேகதாதுவில் அணை கட்டுவதற்கு நில அளவீடு பணிகள் துவங்கிவிட்டதாக செய்திகள் வருகிறது. அணைக் கட்டப்பட்டால் தமிழ்நாட்டில் டெல்டா மாவட்டங்கள் பாலைவனம் ஆகிவிடும் அபாயம் உள்ளது. இதை உணர்ந்து தமிழக அரசு விரைந்து செயல்பட வேண்டும். கர்நாடக அரசு தொடர்ந்து பல்வேறு எதிர்ப்புகளுக்கு இடையில் தங்கள் நிலையில் இருந்து பின்வாங்காமல் தொடர்ந்து மேகதாதுவில் அணைக்கட்டும் பணியில் ஈடுபடுகிறது. தமிழகத்தில் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியில் இருப்பதால் மேகதாது அணைக் கட்டும் விவகாரத்தில் மெத்தன போக்கை கடைபிடிக்க கூடாது. காவிரி நீர் என்பது தமிழக விவசாயிகளின் உயிர்நீர். இவற்றில் அரசியலை புகுத்தக்கூடாது. தமிழக அரசு மேகதாதுவில் அணைக்கட்டும் பிரச்சினையில் உரிய ஆலோசனை செய்து, விவசாயிகளின் வாழ்வாதாரம் காக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



# அந்தியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நிலுவையில் இருக்கும் கோப்புகளுக்கு உடனடி தீர்வு; அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தல்

ஈரோடு, ஆக. 6

அந்தியூர் பேரூராட்சிக்குட்பட்ட அத்தாணி சாலையில் ரூ.1 கோடியே 53 லட்சம் மதிப்பீட்டில் சிறு பாலம், ரூ.1 கோடியே 23 லட்சம் மதிப்பீட்டில் வடிகால், அந்தியூர் வாரச் சந்தையில் ரூ.5 கோடியே 74 லட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் சந்தை மேம்பாடு, அந்தியூர் தவுட்டுப் பாளையம் மயானத்தில் ரூ.1 கோடியே 40 லட்சம் மதிப்பீட்டில் தகன மேடை உள்பட பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் ரூ.9 கோடியே 97 லட்சம் மதிப்பீட்டில் நடக்க உள்ளன.

இந்த நிலையில் அந்தியூர்பகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வர அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். பின்னர் அந்தியூர் அரசு ஆஸ்பத்திரிக்கு சென்ற அவர் அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் எண்ணிக்கை குறித்து டாக்டர்களிடம் கேட்டு அறிந்தார். இதையடுத்து அந்தியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், அந்தியூர் தாலுகா அலுவலகம் ஆகியவற்றிலும் ஆய்வு செய்த அவர் அங்கு பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளையும் பார்வையிட்டார். மேலும் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள கோப்புகள் குறித்து கேட்டு அறிந்ததுடன், அதற்கு உடனடியாக தீர்வு காண அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது உதவி கலெக்டர் (பயிற்சி) விநாயக்குமார் மீனா, அந்தியூர் தாசில்தார் பெரியசாமி, அந்தியூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவசங்கரன், ஆனந்தன், உதவி பொறியாளர் சிவ்பிரசாத், பேரூராட்சி செயல் அலுவலர் செல்வகுமார், வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் சக்தி கிருஷ்ணன், நெடுஞ்சாலை துறை உதவி பொறியாளர் சதாசிவம் ஆகியோர் உடனிருந்தனர்.

# குன்னூர் கல்வி மாவட்ட அளவிலான ஆக்கி போட்டி

குன்னூர், ஆக. 6

குன்னூர்கல்விமாவட்ட அளவில் பள்ளிகளுக்கு இடையே ஆக்கி போட்டி தனியார் பள்ளி சார்பில் அறிஞர் அண்ணா மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில்மாணவமாணவிகள் கலந்துகொண்டனர். இதில் 14 வயதிற்கு உட்பட்ட பெண்கள் பிரிவு ஆக்கி போட்டியில் சாந்தி விஜயாபள்ளி அணி, ஆண்கள் பிரிவில் அருவங்காடு பாதுகாப்பு தொழிலாளர் மெட்ரிக் பள்ளி அணி வெற்றி பெற்றது. 17 வயதிற்கு உட்பட்ட பெண்கள் பிரிவு போட்டியில் சாந்தி விஜயாபள்ளி அணி, ஆண்கள்பிரிவில் டிம்பர்டாப்ஸ் அணி வெற்றி பெற்றன. 19 வயதிற்கு உட்பட்ட பெண்கள் பிரிவு போட்டியில் உபதலை அரசு பெண்கள் பள்ளி அணி, ஆண்கள் பிரிவில் அறிஞர் அண்ணா பள்ளி அணி வெற்றி பெற்றது. முன்னதாக இறுதி போட்டியை ஆக்கி நீலகிரிஸ் அமைப்பின் துணைத் தலைவர் சுரேஷ் குமார் தொடங்கி வைத்தார். இதில் வெற்றி பெற்ற அணிகள் மாவட்ட அளவிலான போட்டிக்கு தகுதி பெற்று உள்ளது.



# தருமபுரியில் தக்காளி விலை குறைவு

தருமபுரி, ஆக. 6

தமிழ் நாட்டில் தக்காளி விலை எப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. வழக்கமாக தக்காளி விலை அதிகரித்தாலும் சில நாட்களில் குறைந்துவிடும். ஆனால் இம்முறை அதிகரித்த தக்காளி விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே சென்றது. நாடு முழுவதும் தொடர் மழை, நோய் தொற்று உள்ளிட்ட காரணங்களால் தக்காளி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. இதன் காரணமாகதக்காளிவிலை கடுமையாக உயர்ந்துள்ளது. விலை உயர்வை கட்டுப்படுத்தும் விதமாக பண்ணை பசுமை கடைகள், ரேசன் கடைகளில் தக்காளி விற்பனை செய்யப்பட்டு வந்தது. ரேஷன் கடைகளில் ஒரு கிலோ தக்காளி சுமார் 60 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.

ஆனால் வெளிச்சந்தையில் தக்காளியின் விலை குறையவில்லை. கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கிலோ நாட்டுத்தக்காளி 160 ரூபாய்க்கு விற்பனையானது. சில்லரை விற்பனை கடைகளில் ரூ.180 வரை விற்பனை செய்யப்பட்டது.

தக்காளி விலை தொடர்ந்து 40வது நாளாக உயர்ந்து வருவதால் மக்கள் மிகுந்த இன்னலுக்கு ஆளாகி வந்தனர்.

இந்த நிலையில் தருமபுரி மாவட்டத்தில் வேளாண் துறை சார்பில் ரேஷன் கடைகள் மூலம் தக்காளி கிலோ 60 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து தருமபுரியில் தக்காளி விலை சற்று குறைந்துள்ளது. நேற்று உழவர் சந்தையில் 68 ரூபாய்க்கு விற்ற நிலையில் தக்காளி இன்று சற்று விலை குறைந்து ரூ. 40 முதல் 50க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் ரேஷன் கடைகளில் வழங்கப்படும் தக்காளி நிறுத்தப்பட்டுள்ளது. தக்காளிவிலைகுறைந்தாலும் வெளி மார்க்கெட்டில் விலையை குறைக்க வியாபாரி களுக்கு மனம் இல்லாததால் கிலோ 70 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை விற்பனை செய்கின்றனர்.



# சத்தி மார்க்கெட்டில் மல்லிகைப்பூ கிலோ ரூ.750க்கு ஏலம்

ஈரோடு, ஆக. 6

சத்தியமங்கலம் பூ மார்க்கெட்டில் நாள்தோறும் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை பூக்கள் ஏலம் நடைபெறும். அதன்படி நேற்று நடந்த ஏலத்துக்கு சத்தியமங்கலம் மற்றும் சுற்று வட்டார பகுதியில் இருந்து விவசாயிகள் 3 டன் பூக்களை கொண்டு வந்திருந்தனர்.

இதில் மல்லிகைப்பூ கிலோ ரூ.750க்கும், முல்லை ரூ.180க்கும், காக்கடா ரூ.200க்கும், செண்டுமல்லி ரூ.50க்கும், பட்டுப்பூ ரூ.120க்கும், சாதிமல்லி ரூ.500க்கும், கனகாம்பரம் ரூ.400க்கும், சம்பங்கி ரூ.140க்கும், அரளி ரூ.120க்கும், துளசி ரூ.40க்கும், செவ்வந்தி ரூ.150க்கும் ஏலம் போனது.



# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 4 ஆயிரம் கன அடியாக நீடிப்பு

தருமபுரி, ஆக 6

தருமபுரி, கர்நாடகா மாநில காவிரி நீர்பிடிப்பு பகுதியில் கன மழை பெய்தது. இதனால் அங்குள்ள கபினி, கே.ஆர்.எஸ். அணைகளில் இருந்து உபரி நீர் தமிழகத்திற்கு அதிக அளவு திறக்கப்பட்டது. தற்போது காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழை குறைந்தது. இதனால் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து சரிந்து காணப்பட்டது. நேற்று மாலை 4 ஆயிரம் கன அடியாக இருந்த நீர் வரத்து இன்று காலை 6 மணி நில வரப்படி ஒகேனக்கலுக்கு அதே அளவு தண்ணீர் குறையாமல் நீடித்து வருகிறது.



# மாங்கனி கண்காட்சியில் பொதுமக்களுக்கு ஆடிப்பட்ட காய்கறி விதைகள் விநியோகம்

கிருஷ்ணகிரி, ஆக. 6

கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தோட்டக்கலைத்துறை சார்பில் அகில இந்திய மாங்கனி கண்காட்சி நடைபெற்று வருகிறது. இதில் நேற்று பொதுமக்கள், விவசாயிகளுக்கு ஆடிப்பட்ட காய்கறி விதைகள் இலவசமாக வழங்கும் முகாம் நடந்தது. மாவட்ட கலெக்டர் கே.எம்.சரயு தொடங்கி வைத்தார். தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் பூபதி முன்னிலை வகித்தார். பொதுமக்கள், விவசாயிகளுக்கு ஆடிப்பட்ட விதை தொகுப்பை வழங்கி கலெக்டர் பேசியதாவது: மாவட்டத்தில் ஆடிப்பட்டத்தை முன்னிட்டு தோட்டக்கலைத்துறை மூலம் 5 ஆயிரம் ஆடிப்பட்ட காய்கறி விதைத் தொகுப்புகள் இலவசமாக வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. ஆடிப்பட்டத்தில் காய்கறி விதைக்க, கை மாகம் அறுவடை செய்யலாம், பயிர்களுக்கு தேவையான சூரிய ஒளி, பிராணவாயு, நல்ல மழை கிடைக்கும். கோடைக்காலங்களில் இறுகி மண், ஆனி மழையில் தளர்ந்து காணப்படும்.

மண்ணின் ஈரப்பதத்தில் நுண்ணுயிர்கள், மண் புழு, நல்ல பாக்டீரியாக்கள் உருவாக தொடங்கும். இதனால் மண் செழிப்பதோடு விதைத்த பிறகுபயிர்களும்செழித்துஅறுவடையை ஊக்குவிக்கிறது. பூச்சிகள் மற்றும் நோய்களின்தாக்கம் குறைவாக இருக்கும். ஆடி மாகம், அவரை, கக்கிரி, கக்காளி, மிளகாய், பாகற்க்காய், சுரைக்காய், பூசணிக்காய், முள்ளங்கி, வெண்டை, கொத்தவரை, பீர்க்கங்காய், கீரை, புடலங்காய், சாம்பல் பூசணி, முருங்கை உள்ளிட்டவை விதைக்கலாம். இந்த வகையான காய்கறி விதைகள், தற்போது இலவசமாக வழங்கப்படும் தொகுப்பில் உள்ளன. இதனை விவசாயிகள், வீட்டு காய்கறித்தோட்டம் அமைக்க விரும்பும் பொதுமக்கள் தொடர்புடைய தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## அடுத்த பாடலை வெளியிடும் ஜெயிலர் படக்குழு



இயக்குனர் நெல்சன் இயக்கத்தில் ரஜினி தற்போது 'ஜெயிலர்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இதில் மலையாள நடிகர் மோகன்லால், கன்னட நடிகர் சிவராஜ்குமார் மற்றும் பிரியங்கா மோகன், ரம்யா கிருஷ்ணன், யோகிபாபு, வசந்த் ரவி, விநாயகன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். 'ஜெயிலர்' திரைப்படம் வருகிற 10ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ள நிலையில் இப்படத்தின் அதிரடி ஆக்ஷன் காட்சிகள் நிறைந்த ஷோகேஸ் வீடியோ சமீபத்தில் வெளியாகி கவனம் ஈர்த்தது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அறிவிப்பை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, 'ஜெயிலர்' திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள 'ரத்தமாரே' பாடல் வெளியிடப்பட்டுள்ளதாக படக்குழு கிளிம்ப்ஸ் வீடியோ ஒன்றை பகிர்ந்து தெரிவித்துள்ளது.

## தி கேரளா ஸ்டோரி பட நடிகை திடீரென மருத்துவமனையில் அனுமதி



சிம்பு நயன்தாரா நடிப்பில் வெளியான 'இது நம்ம ஆளு' படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடி தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் நடிகை அதா சர்மா. இந்தி, தெலுங்கு, கன்னட மொழிப் படங்களில் நடித்து வரும் இவர் பிரபுதேவாவுடன் இணைந்து 'சார்லி சாப்ளின்2' படத்திலும் நடித்திருந்தார். சமீபத்தில் விபுல்ஷா தயாரிப்பில் இயக்குனர் சுதிப்டோ சென் இயக்கத்தில் அதா சர்மா நடித்த 'தி கேரளா ஸ்டோரி' திரைப்படம் சர்ச்சையை ஏற்படுத்தியது அதுமட்டுமல்லாமல் ரூ. 100 கோடிக்கு மேல் வசூலையும் குவித்தது. மேலும், இப்படத்தில் நடித்ததற்காக நடிகை அதா சர்மாவிற்கு மிரட்டல்கள் வந்ததாக அவர் கூறியிருந்தார். இந்நிலையில், நடிகை அதா சர்மா அவரது அடுத்த படத்திற்கான புரோமோஷன் நிகழ்ச்சியின் போது திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் மருத்துமவனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு கடுமையான வயிற்று போக்கு, உணவு அலர்ஜி போன்ற பிரச்சினைகள் இருந்ததாகவும் இதையடுத்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

## இதயத்தை ஆள்பவர் மீண்டும் வந்துள்ளார்... சந்திரமுகி2 புதிய அறிவிப்பு



ராகவா லாரன்ஸ் தற்போது நடித்துள்ள திரைப்படம் 'சந்திரமுகி 2'. இப்படம் பல மொழிகளில் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது.

இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகி வரும் திரைப்படம் 'சந்திரமுகி 2'. இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர்.

லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம்கீரவாணி இசையமைத்துள்ளார். 'சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது. இதையடுத்து இப்படத்தில் வேட்டையன் ராஜாவாக லாரன்ஸ் இருக்கும் போஸ்டரை படக்குழு சமீபத்தில் வெளியிட்டது. இந்நிலையில், 'சந்திரமுகி 2' திரைப்படத்தின் புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, கங்கனாரனாவத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் நாளை காலை 11 மணிக்கு வெளியாகும் என படக்குழு வீடியோ ஒன்றை பகிர்ந்து அறிவித்துள்ளது. இந்த வீடியோவை இணையத்தில் ட்ரெண்டாகி வருகிறது.

## மாளவிகா மோகனனின் பிறந்தநாள் பரிசு.. தங்கலான் படக்குழு வெளியிட்ட போஸ்டர்



4 ஆகஸ்ட் 2023 3:07 PM பா.இரஞ்சித் இயக்கத்தில் விக்ரம், மாளவிகா மோகனன் உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகி வரும் படம் 'தங்கலான்'. இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் நிறைவடை ந்ததாக படக்குழு தெரிவித்தது.

இயக்குனர் பா.இரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடித்துள்ள படம் 'தங்கலான்'. இந்தப் படத்தை ஞானவேல் ராஜா தயாரிக்க ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்கிறார். இப்படம் கர்நாடக மாநிலத்தில் உள்ள கே.ஜி.எஃப். குறித்த கதை என்று இயக்குனர் பா.இரஞ்சித் தெரிவித்திருந்தார். இதனால் இந்த படம் ரசிகர்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இப்படத்தில் பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி, ஹரி, பிரிட்டிஷ் நடிகர் டேனியல் கால்டகிரோன் நடிக்கி ன்றனர். 'தங்கலான்' படத்தின் பட ப்பிடிப்பு கடந்த ஆண்டு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று சமீபத்தில் நிறைவடைந்தது. இந்நிலையில், மாளவிகா மோகனனின் பிறந்தநாளான அவருக்கு வாழ்த்து தெரிவித்து தங்கலான் படத்தின் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளனர். இந்த போஸ்டர் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.



## ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிடும் அர்ஜுன் தாஸ் படக்குழு



'மௌனகுரு', 'மகாமுனி' படங்களை இயக்கி தமிழ் திரையுலகில் கவனம் பெற்றவர் இயக்குனர் சாந்தகுமார். இவர் இயக்கவுள்ள மூன்றாவது படத்தில் அர்ஜுன்தாஸ் கதாநாயகனாக நடிக்கிறார். தான்யா ரவிச்சந்திரன் கதாநாயகியாக நடிக்கு இப்படத்தை 'டிஎன்ஏ மெக்கானிக் கம்பெனி' தயாரிக்கிறது.



இதில், ரேஷ்மா வெங்கடேஷ், சுஜித் ஷங்கர், ஜிஎம் சுந்தர், எஸ். ரம்யா உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். தமன் இசையமைக்கும் இப்படத்திற்கு சிவா ஒளிப்பதிவு செய்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு கடந்த ஆண்டு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகும் என்று படக்குழு போஸ்டர் வெளியிட்டு தெரிவித்துள்ளது.

## முதல் டி20 போட்டி தாமதமாக பந்துவீசிய இந்தியா, வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு அபராதம்



இந்தியா, வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான முதல் டி20 போட்டி தரோபாவில் உள்ள பிரையன் லாரா ஸ்டேடியத்தில் நடைபெற்றது. டாஸ் வென்று முதலில் ஆடிய வெஸ்ட் இண்டீஸ் அணி 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 149 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக ரோமன் பாவெல் 48 ரன்கள் குவித்தார். நிகோலஸ் பூரன் 41 ரன்கள் எடுத்தார். இந்திய அணி சார்பில் அர்ஷ்தீப் சிங், யுஸ்வேந்திர சாஹல் தலா 2 விக்கெட் கைப்பற்றினர். இதையடுத்து, 150 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 145 ரன்கள் மட்டுமே எடுத்தது. திலக் வர்மா அதிரடியாக ஆடி 39 ரன்னும், சூர்யகுமார் யாதவ் 21 ரன்னும், கேப்டன் ஹர்திக் பாண்ட்யா 19 ரன்னும் எடுத்தனர். இதன்மூலம் 4 ரன்கள் வித்தியாசத்தில் வெஸ்ட் இண்டீஸ் திரில் வெற்றி பெற்றதுடன், டி20 தொடரில் 10 என முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில், முதல் டி20 போட்டியில் தாமதமாக பந்து வீசியதற்காக இந்திய அணிக்கு போட்டிக் கட்டணத்தில் இருந்து 5 சதவீதம் அபராதம் விதித்தது ஐசிசி. இதேபோல் வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு 10 சதவீதம் அபராதம் விதித்துள்ளது ஐசிசி.

## ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் எச்.எஸ்.பிரனாய், பிரியான்ஷு ரஜாவத் அரையிறுதிக்கு முன்னேற்றம்



ஆஸ்திரேலிய ஓபன் சர்வதேச பேட்மிண்டன் போட்டி சிட்னியில் நடந்து வருகிறது. இதில் இன்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்றில் முன்னாள் 'நம்பர் ஒன்' வீரரான இந்தியாவின் ஸ்ரீகாந்த், சக வீரரான பிரியான்ஷு ரஜாவத்துடன் மோதினார். இதில் ரஜாவத் 2113, 218 என்ற நேர்செட்டில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். மற்றொரு வீரரான இந்தியாவின் எச்.எஸ்.பிரனாய் சரிவில் இருந்து மீண்டு 1621, 2117, 2114 என்ற செட் கணக்கில் இந்தோனேசியாவின் அந்தோனி ஜிங்டிங்கை வீழ்த்தி அரையிறுதியை எட்டினார். நாளை நடைபெறும் அரையிறுதிப் போட்டியில் எச்.எஸ்.பிரனாய், சக வீரரான பிரியான்ஷு ரஜாவத்தை எதிர்கொள்கிறார்.

## ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி: தென்கொரியா பாகிஸ்தான் ஆட்டம் டிரா ஆனது



மாலை 4 மணிக்கு தென்கொரியாபாகிஸ்தான் அணிகளுக்கு இடையே ஆட்டம் தொடங்கியது. ஆட்டத்தில் இரு அணிகளும் சிறப்பாக விளையாடி தலா ஒரு கோல் அடித்தது.

7வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் நேற்று தொடங்கியது. இந்தியா, பாகிஸ்தான், தென்கொரியா, சீனா, ஜப்பான், மலேசியா ஆகிய 6 நாடுகள் பங்கேற்றுள்ளன. தொடக்க நாளான நேற்று மூன்று ஆட்டங்கள் நடந்தது. தென்கொரியா 2-1 என்ற கோல் கணக்கில் ஜப்பானையும், மலேசியா 31 என்ற கணக்கில் பாகிஸ்தானையும் தோற்கடித்தன. இரவு 8.30 மணிக்கு நடந்த ஆட்டத்தில் இந்தியாசீனா அணிகள் மோதின. இதில் இந்திய அணி கோல் மழை பொழிந்தது. 7-2 என்ற கோல் கணக்கில் சீனாவை பந்தாடி வெற்றியுடன் இந்தியா கணக்கை தொடங்கியது.

இந்தியா தரப்பில் கேப்டன் ஹர்மன் பிரீத் சிங், வருண்குமார் தலா இரண்டு கோலும், சுக்ஜீத் சிங், ஆகாஷ்தீப் சிங், மன்தீப் சிங் தலா ஒரு கோலும் அடித்தனர். தொடர்ந்து, இன்று மூன்று லீக் ஆட்டங்கள் நடக்கிறது. மாலை 4 மணிக்கு தென்கொரியாபாகிஸ்தான் அணிகளுக்கு இடையே ஆட்டம் தொடங்கியது. இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் சிறப்பாக விளையாடி தலா ஒரு கோல் அடித்தது. இதனை தொடர்ந்து, இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இதனால், ஆட்ட நேர முடிவில் 1-1 என்ற கோல் கணக்கில் போட்டி சமம் ஆனது.

## உலக கோப்பை மகளிர் கால்பந்து: 2வது சுற்று தொடங்கியது



உலக கோப்பை மகளிர் கால்பந்து போட்டி ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் நடைபெற்று வருகிறது. போட்டி கடந்த மாதம் 20ந் தேதி தொடங்கியது. இந்தப்போட்டியில் 32 நாடுகள் பங்கேற்றன. அவை 8 பிரிவாக பிரிக்கப்பட்டன.

'லீக்' போட்டிகள் முடிவடைந்தன. இதன் முடிவில் சுவிட்சர்லாந்து, நார்வே, ஆஸ்திரேலியா, நைஜிரியா, ஜப்பான், ஸ்பெயின், இங்கிலாந்து, டென்மார்க், நெதர்லாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜமைக்கா, சுவீடன், தென் ஆப்பிரிக்கா, கொலம்பியா, மொராக்கோ ஆகிய 16 நாடுகள் நாக்அவுட் சுற்றான 2வது ரவுண்டுக்கு தகுதி பெற்றன. நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், கனடா, அயர்லாந்து, ஜாம்பியா, கோஸ்டாரிகா, சீனா, ஹைத்தி, போர்ச்சுக்கல், வியட்நாம், பிரேசில், பனாமா, இத்தாலி, அர்ஜென்டினா, ஜெர்மனி, தென் கொரியா ஆகிய அணிகள் வெளியேற்றப்பட்டன. 2வது சுற்று ஆட்டம் தொடங்குகிறது.

ஆட்டங்களில் ஸ்பெயின்சுவிட்சர்லாந்து, ஜப்பான்நார்வே அணிகள் மோதுகின்றன.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.